https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தொல்காப்பியரின் வண்ணம்

**முனைவர் அந்தோணி சகாய சோபியா. ஜே**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி
பாளையங்கோட்டை

**ஆய்வுச் சுருக்கம்**

*தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்யுளியல் பகுதியில், 34 செய்யுள் உறுப்புகள் பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். இச்செய்யுள் உறுப்புகளில் ஒன்றான வண்ணம் என்னும் உறுப்பானது, செய்யுளின் யாப்பமைப்புக்குப் பெரிதும் உதவுகின்றது என்பதை வெளிக் கொணரும் நோக்கோடு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**முன்னுரை**

*உலக மொழிகளில் தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது தமிழ் மொழியாகும். இலக்கிய, இலக்கண வளமையும் வரலாறும் உடைய செம்மொழியானத் தமிழ்மொழியின் தொன்மை க்கு அருஞ்சான்றாக விளங்குபவை சங்க இலக்கியங்களும் இலக்கண நூலான தொல்காப்பியமும் ஆகும். தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில், செய்யுளியல் என்னும் இயலானது, இலக்கியத்திற் கானக் கோட்பாட்டையும் ஏனைய இயல்கள் பாடுபொருள்களையும் கூறுகின்றன என்னும் அடிப்படையில், தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்யுளியலை மையமாக வைத்து ஆய்வு செய்வதென்பது இங்கு அவசியமாகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரம், கவிதையியலுக் கான அடிப்படைப் பண்புகளாகக் கூறும் பாவியல் கோட்பாடுகளில் ஒன்றான, செய்கை என்னும் உறுப்பின் கூறான வண்ணம் பற்றி ஆராயும் நோக்கோடு இக்கட்டுரையானது அமைகிறது.*

**வண்ணம் - தோற்றம்**

*தொல்காப்பியர் கூறும் வண்ணம், பண்டைக் காலத்;தில், மக்களின் வாய்மொழிப் பாடல்களான, நாட்டுப்புறப்பாடல், கூத்துப்பாடல், கும்மிப்பாடல், சிந்து, கண்ணி ஆகிய நாட்டுப்புறப் பாடல் வடிவங்களில் இடம்பெற்றிருந்தது. எனவே மக்கள் வாய்மொழியாக, வண்ணத்தைப் பாடி மகிழ்ந்தார்கள். இவ்வண்ணமானது கேட்பவர்க்கு இன்பத்தைத் தரக்கூடியது. இசையின் ஒரு பகுதியான வண்ணம் என்னும் செய்யுள் உறுப்பு, தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தோன்றியதால், வண்ண இலக்கியத்தின் காலம் வரலாற்றில், சுமார் கி.மு. 700, 800 ஆண்டுகட்கு முந்தியது என்பர்.*

### வண்ணம் - சொல் விளக்கம்

**“வடமொழியில் உள்ள ‘வர்ண’ என்னும் சொல், தமிழ் மொழியில் வண்ணம் என்று மாறியிருக்கக்கூடும்”[1]** என்ற கருத்தினை முன் வைக்கிறார் எஸ்.ஆர்.சாந்தகுமார். *(எஸ்.ஆர். சாந்தகுமார், வண்ணம், இலக்கியத்தில் நிறம், ப.4)* மேலும் **“வண்ணம் என்ற சொல், சிலம்பில் குறிப்பிடப் பெற்றுள்ளதைக் காணும்போது அச்சொல் வர்ணம், வருணம் என்று ஆயது என்று கொள்ளுதற்கு இடமுண்டு”[2]** என்ற கருத்தும் முன்வைக்கப் படுகிறது *(சொக்கலிங்கம், வி. (பதி), ஆசிரிய நிகண்டு, தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சை, 1975, ப.216)* இருப்பினும் வண்ணம் என்னும் சொல்லாட்சியே தொன்மை நிலையில், தொல்காப்பியம் தொடங்கி, இன்று வரை வழங்கப்பட்டு வருகிறது.

### வண்ணம் - பொருள்

வண்ணம் என்பது ‘பா’ என்னும் செய்யுள் உறுப்பாகக் கொள்ளப்படுகிறது. வண்ணம் என்பதற்கு,

**“வண்ணங்கள் என்பன சந்த வேறுபாடுகள்”[3]** என்று கூறுகிறார் பேராசிரியர். *(வீ.ப.கா. சுந்தரம், தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள், ப.43).* ஆனால், பேராசிரியரின் கருத்தில் சற்று மாற்றம் கொண்ட வீ.ப.கா.சுந்தரம், பின்வருமாறு விளக்கமளிக்கிறார்.

**“இவ்விளக்கம் வண்ணம் என்னும் சொல்லுக்குரிய பொருளோடு இணைந்து அமையவில்லை. வண்ணம் என்னும் சொல் நிறத்தைக் குறிக்கும் (வண்ணம் ஸ்ரீ வர்ணம்). வண்ணப்பாடல்களில் எழுத்தொலிகளின் நிறம் உண்டு. வண்ணங்களில் எழுத்தொலிகளின் நிறமானது (ஒழுக்கானது), மிக்க இனியது. உணர்ச்சியூட்டுவது. அதனால் வண்ணத்தை ‘ஒலியின் நிறம்’ (Tonal Colour) என்று கூறலாம். எனவே, வண்ணம் என்பது ‘சந்த வேறுபாட்டு ஒலியின் நிறம்’ என்று வரையறை கூறலாம்”[4]** என்று வீ.ப.கா.சுந்தரம் விளக்கமளிக்கிறார். *(வீ.ப.கா. சுந்தரம், தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள், ப.35)*

**“செய்யுளின் ஓசையை முடிந்த அளவு புலப்படுத்த முயலும் ஓர் உறுப்பு”[5]** என்று விளக்கம் தருகிறது தொல்காப்பிய அகராதி. *(ஜெயதேவன், (ப.ஆ) தொல்காப்பிய அகராதி, ப.67)*

வண்ணம் என்பது ஓசை என்ற பொருளைத் தருகிறது. “சந்தம்” என்பது ஓசைகளை அளக்கின்ற கருவி. ஒலிப்பண்புகளை வரையறுத்துக் காட்டுவது. எழுத்தினுடைய வன்மை, மென்மைகளை நெறிப்படுத்துவது. இயல், இசை, நாடகத்துறைகளில் உயிர்நிலையாக நின்று உணர்ச்சிகளைப் பெருக்கிக் காட்டுவது. மொழியினுடைய வளத்தையும் புலவனுடைய ஆற்றலையும் ஒரே நேரத்தில் இணைத்துக்காட்டி நிற்பது என்னும் பொருளைத் தந்து நிற்கிறது.

வண்ணங்கள் என்பன சந்தம் என்பதையே குறிக்கும் என்னும் கருத்தோடு,

**“சந்தம் வண்ணம் ஆமே”** - ஆசிரிய நிகண்டு
**“சந்தம் வண்ணம்”** - சேந்தன் திவாகரம்
**“வண்ணம் சந்தம்”** - சூடாமணி
**“வண்ணம் சந்தம்”** - கயாதரம்”[6]

என்றும் அரும் பொருள் விளக்க நிகண்டு கூறுகிறது. *(அருமருந்தைய தேசிகர், அரும் பொருள் விளக்க நிகண்டு, செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை, 1931, பக்.35)*

பாட்டின் கண்ணே நிகழும் ஓசை விகற்பமாகும். உயிரெழுத்துக்களுள் குறில், நெடில் ஆகிய மாத்திரையளவு பற்றியும் மெய்யெழுத்துக்களுள் வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து ஆகிய இனம் பற்றியும் செய்யுளுக்குரிய அசை, சீர், அடி, தொடை முதலிய பிற உறுப்புகள் பற்றியும் செய்யுள்கள் வெவ்வேறு ஓசை நலம் உடையனவாய்ப் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் இன்பந்தருவன. இங்ஙனம் ஓதவும் கேட்கவும் சுவை பயக்கும் இனிய ஓசை நலம் வாய்ந்த பாக்கள் வண்ணம் என வழங்கப்பெறும். ஓசையை இனிமைபட உரைப்பதும் வடிவத்தால் பாட்டை அழகு செய்வதும் ஓசை வேற்றுமையை அளவிட்டு வரையறுப் பதும் ஆகிய ஓசையுடைமை, அழகுடைமை, அளவுடைமை என்னும் மூன்று பண்புகளை வண்ணம் எனக்காட்டுகின்றது. இதிலிருந்து ஒரு பாடலின்கண் நிகழும் ஓசை விகற்பமாகிய சந்த வேறுபாடே வண்ணம் என்று வழங்கப் படுகிறது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

### திறனாய்வாளர்களின் கருத்து

வண்ணம் பற்றியத் திறனாய்வாளர்களின் கருத்துக்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

நீதிவாணன்

"நடைக்கூற்று என்ற அளவில் இவை குறிப்பிட்ட ஓசையினை எழுப்பவே பயன் படுத்தப்படுகின்றன. சங்க இலக்கியங்கள் அகவல் ஓசை, துள்ளல் ஓசை, முதலான ஓசைகளை உடையனவாகக் கருதப்படுகின் றன. ஆனால் உண்மையில் அவை எங்ஙனம் ஒலிக்கப்பட வேண்டும் என்பதற்கு இன்று எந்தச் சான்றும் இல்லை. ஒலி நடையியல் திட்டப்பாங்குகள் ஒருவேளை இவ்வோசை களைத் தரும் வண்ணம் அமைக்கப் பெற்றிரு க்கலாம்."[7] (ஜெ.நீதிவாணன், நடையியல், ப.41) என்னும் நீதிவாணனின் கூற்று அதனை உறுதி செய்கின்றது.

சோ. ந. கந்தசாமி

வண்ணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு படைப்பானது அழகு பெறும் என்ற கருத்தில், சோ. ந. கந்தசாமி என்பவர் வண்ணம் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். "வண்ணம் என்றது நிறத்தைக் குறிக்கும். பல்வேறு ஒலிகள் என்னும் வண்ணத்தினால் வனப்புறும் பாக்கள் என்பது ஆசிரியர் உள்ளமாகும். வண்ணம் என்ற யாப்புக் கோட்பாடு Painting with Sounds என்ற கருத்தில் ஜெர்மன் மொழியிலும் வழங்கி வருவதாகத் தெரிகிறது."[8] (சோ.ந.கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம், ப.95) மேற்கூறப்பட்டுள்ள திறனாய்வாளர்களின் கூற்றுப்படி, வண்ண மானது, அழகு, அளவு, இசை, ஒலி, சந்தம், பண்பு, சிறப்பு, மாலை எனப் பல பொருள் தந்து நிற்பதை அறியமுடிகிறது. இசையோடு கூடிய இன்பம் பயப்பதற்கு ஏற்பப் பாடல் அமைவதற்கு வண்ணத்தை அமைத்துள்ளார் கள் என்பது தெளிவாகிறது.

வண்ணம் வரும் இடங்கள்

வண்ணம் என்னும் செய்யுள் உறுப்பானது, பாடலின் எழுத்து, அசை, சீர், அடி போன்றவற்றுள், முதல், இடை, கடை என்னும் எந்த இடத்திலும் இடம் பெற்றிருக்கலாம். அந்த இடங்கள் வண்ணத் தால் சிறப்புப் பெற்று, தனித்து வெளிப்படும். கூற்று உரைப்பவர்க்கும் கேட்பவர்க்கும் இன்பம் தரக்கூடிய வண்ணம் - இசை, நிறம், சந்தம், ஓசை, பண்பு, வடிவம், அழகு, இனம் எனப் பலவகைகளில், செய்யுளுக்கு அழகு சேர்க்கிறது.

தொல்காப்பியரின் வண்ணம்

வண்ணம் என்னும் சொல் தொல்காப்பியர் காலம் முதற்கொண்டே தமிழில் பயின்று வருகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்யுளியல் பகுதியில், 34 செய்யுள் உறுப்புகள் பற்றித் தொல்காப்பியர் கூறியுள் ளார். இச்செய்யுள் உறுப்புகளில் ஒன்று வண்ணம். இவ்வண்ணம் என்னும் சொல், அழகு, சந்தம், இசை, நிறம், ஓசை, நன்மை, சித்திரம், மாலை, சிறப்பு, இனிமை எனப் பல பொருள்களை உள்ளடக்கி நிற்கிறது.

பண்டைக் காலத்தில், வண்ணம் நாட்டுப்புற மக்களிடையே வாய்வழியாகப் பாடப்பட்டு வந்துள்ளது. அந்நாட்டுப்புற இலக்கியங்களில் உள்ள வண்ணங்களைத் தொல்காப்பியர் இருபதாக வகைப்படுத்தியுள்ளார்.

**"வண்ணந் தாமே நாலைந்தென்ப"**[9]

(தொல்.பொருள்:செய்யுளியல்:204)

என்கிறார் தொல்காப்பியர்.

தொல்காப்பியர் வண்ணங்களை இருபது வகையாகப் பிரித்துக் கூறுகின்றார். அவை யாவன: பாஅ வண்ணம், தாஅ வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், அளபெடை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம், அகப் பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம், எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம், தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்று இருபது வகைகளாகப் பிரித்துக் கூறுகின்றார். இதனை,

**"அவைதாம்**
**பாஅ வண்ணம், தாஅ வண்ணம்,**
**வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம்,**
**இயைபு வண்ணம், அளபெடை வண்ணம்,**
**நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம்,**
**சித்திர வண்ணம், நலிபு வண்ணம்,**
**அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு**
**வண்ணம்,**
**ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம்,**
**எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம்,**
**தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம்,**
**உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்று**
**ஆங்ஙனம் அறிய அறிந்திசினோரே"**[10]

(தொல்.பொருள்.இளம்.செய்யுள்.நூ.எ.514) என்ற நூற்பா உணர்த்துகிறது.

**“வண்ணம் நூறும் பலவும் ஆகி வேறுபடினும் இவ்விருபதுள் அடங்கும்”**[11] என்றார் பேராசிரியர். (வீ.ப.கா.சுந்தரம், தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள், ப.43).

தொல்காப்பியத்தில் இடம்பெறும் வண்ணம் என்னும் சொல்லானது, பெரும்பான்மையாக இசை, இசைத் தொடர்பான குறிப்பு போன்றவற்றை வெளிப்படுத்தி நிற்கிறது.

வண்ணம் என்னும் இச்சொல், தொல்காப்பியத்தில் இசை தொடர்பானக் குறிப்புடன் 37 இடங்களில்; காணப்படுகிறது.

**தொல்.சொல்.** – 26-2, 78-1, 416-1, III-199-1, 310-9, 513-1, 514-2(2), 3(2), 4(2), 5(2), 6(2), 7(2), 8(2), 9 (2), 10(2), 11(2), 515(2), 516-1, 517-1, 518-1, 519-1, 520-1, 521-1, 522-1, 523-1, 524-1, 525-1, 526-1, 527 -1, 528-1, 529-1, 530-1, 531-1, 532-1, 533-1, 534-1, 535-1.

மேலும் மேற்கூறப்பட்டுள்ள நூற்பாக்களில் காணப்படும் வண்ணம் என்னும் சொல், நிறத்தைக் சுட்டும் விதமாகப் பின்வரும் நான்கு நூற்பாக்களில் பயின்று வருகிறது.

**“வண்ணச்சினைச் சொல்”**[12] (தொல்;.26-2)

**“வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்றா…”**[13]
(தொல்.78-1)

**“வண்ணம் திரிந்து புலம்புங் காலை
உணர்ந்த பேர்து உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையாற் புணர்க்கவும்;
பெறுமே!”**[14] (தொல்.199-1)

**“வண்ணத்தின் வடிவின் அளவினை
சுவையினென்று
அன்ன பிறவும் அதன் குணம் நுதலி;”**[15]
(தொல்.416-1)

என்னும் நூற்பாக்களில் வரும் வண்ணம் என்னும் சொல், நிறம் என்னும் பொருளைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. இவற்றிலிருந்து, தொல்காப்பியர் காலம் தொட்டே வண்ணம் என்னும் சொல் தமிழில் பயன்படுத்தப் பட்டமையினை அறிய முடிகிறது.

## வண்ணங்களின் பகுப்பு

இருபது வகையான வண்ணங்களை நான்கு வகையான பகுப்பினுள் அடக்கலாம்.

1. எழுத்தோசைகளின் நீளம் பற்றிய வண்ணங்களாக குறில் வண்ணம், நெடில் வண்ணம், அளபெடை வண்ணம், சித்திர வண்ணம் என்னும் நான்குவகை வண்ணமும் இவ்வகையில் அடங்கும்.
2. எழுத்தோசைகளின் தன்மை பற்றிய வண்ணங்களாக வல்லின வண்ணம், மெல்லின வண்ணம், இயைபு வண்ணம், ஒழுகு வண்ணம், நலிபு வண்ணம், எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம் என்னும் ஏழுவகை வண்ணத்தை இவ்வகையில் அடக்கலாம்.
3. எழுத்தின் காலவேகம் பற்றிய வண்ணங்களாக, உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்னும் இவ்விரண்டு வண்ணத்தையும் கூறலாம்.
4. வடிவம் பற்றிய வண்ணங்களாக பாஅ வண்ணம், தாஅ வண்ணம், ஏந்தல் வண்ணம், ஒரூஉ வண்ணம், தூங்கல் வண்ணம், அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு; வண்ணம் என்னும் ஏழு வகையான வண்ணங்களும் வடிவ உறுப்பு வண்ணங்களாக அமைகின்றன.

## வண்ணவகைப் பட்டியல்

**எழுத்து ஓசைகளின் நீளம்**

- குறில் வண்ணம்
- நெடில் வண்ணம்
- அளபெடை வண்ணம்
- சித்திர வண்ணம்

**எழுத்தோசைகளின் தன்மை**

- வல்லின வண்ணம்
- மெல்லினவண்ணம்
- இயைபு வண்ணம்
- ஒழுகு வண்ணம்
- நலிபு வண்ணம்
- எண்ணு வண்ணம்
- அகைப்பு வண்ணம்

**எழுத்தின் கால வேகம்**

- உருட்டு வண்ணம்
- முடுகு வண்ணம்

**வடிவம்**

- பாஅ வண்ணம்
- தாஅ வண்ணம்
- ஏந்தல் வண்ணம்
- ஒரூஉ வண்ணம்
- தூங்கல் வண்ணம்

- அகப்பாட்டு வண்ணம்
- புறப்பாட்டு வண்ணம்

உரைப்பவருக்கும் கேட்பவருக்கும் இன்பம் தரக்கூடிய தொல்காப்பியர் கூறும் இருபது வண்ணங்களும் அவற்றின் தன்மை பொறுத்து இங்கு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## முடிவுரை

மேற்கூறப்பட்டுள்ளக் கருத்துக்களின் அடிப் படையில் கீழ்க்கண்ட ஆய்வு முடிவுகள் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

1. தொல்காப்பியர் கூறும் வண்ணம், பண்டைக் காலத்;தில் நாட்டுப்புறப் பாடல் வடிவங்களில் இடம்பெற்றிருந்தது.
2. வண்ணம் என்னும் சொல், அழகு, சந்தம், இசை, நிறம், ஓசை, நன்மை, சித்திரம், மாலை, சிறப்பு, இனிமை போன்றவற்றின் அடிப்படையில் தோன்றியிருக்கக் கூடும்.
3. தொல்காப்பியத்தில் 37 இடங்களில் காணப்படும் வண்ணம் என்னும் சொல்லானது, 4இடங்களில் நிறத்தினைக் குறிக்கும் சொல்லாக அமைந்து வந்துள்ளது.
4. வண்ணம் என்பது சந்தத்தில் காணப்படும் ஒலிநிறம் என்ற கருத்தானது, ஆய்வின்வழி பெறப்படுகிறது. தொல்காப்பியரின் இருபது வண்ணங்களிலும் ஒலி நிற வேறுபாடுகள் காணப்படுகின்றன.
5. எழுத்தோசைகளின் நீளம், தன்மை, எழுத்தின் காலவேகம், வடிவம் இவற்றின் அடிப்படையில்தொல்காப்பியரின்இருபது வண்ணங்களும் பகுக்கப்பட்டு ள்ளன.
6. இசைப் பாடல்களில் தாளத்தினை நிறைவு செய்வதற்கும் சுவைகளைக் காட்டுவதற்கும் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் நீண்டு ஒலிப்பது அளபெடையோடு இணைத்துப் பார்க்கப் படுகிறது.
7. தொல்காப்பியர் வண்ணம் என்பதற்குத் திட்டமிட்ட வரையறை எதையும் தரவில்லை. ஆனாலும் வண்ணங்கள் குறித்த நூற்பாக்களின் அடிப்படையில் வண்ணம் என்பதை எழுத்தொலி ஓசை கள் பற்றியும் சொல்லமைப்புப் பற்றியும் சீர் அமைப்புப் பற்றியும் தொடை நயம் பற்றியும் வரும் என்பதாகக் கொள்ளலாம்.

## துணை நின்ற நூல்கள்

1. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் எழுத்ததிகாரம், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி.டி.கே.சாலை, சென்னை - 18, ஜீலை-1998.
2. பேரா.கந்தசாமியாரவர்களும் மொழி ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் அவர்களும் திருத்திய திருத்தங்களுடனும் குறிப்புரையுடனும் சேனாவரையருரை, தொல்காப்பியம் (சொல்லதிகாரம்), திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி.டி.கே.சாலை, சென்னை-18, 14ஆம் பதிப்பு:செப்டம்பர் 1997.
3. சண்முகம் பிள்ளை. மு., (ப.ஆ.), இளம் பூரணம் உரை,தொல்காப்பியம் (பொருளதிகாரம்), முல்லை நிலையம், 9, பாரதி நகர் முதல் தெரு, தி.நகர், சென்னை-600 017, ஆகஸ்டு-1997.
4. அருமருந்தைய தேசிகர், அரும் பொருள் விளக்க நிகண்டு, செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை, 1931, பக்.35
5. கந்தசாமி, சோ.ந., தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், சிதம்பரம்-608001, முதற்பதிப்பு - ஜனவரி,1989.
6. சுந்தரம்.வீ.ப.கா., தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ. வளாகம், தரமணி, சென்னை-600 113, முதற்பதிப்பு: மே-1994
7. சுப்பிரமணியன்.ச.வே., கடிகாசலம்.ந., (ப.ஆ.), இலக்கியத்தில் நிறம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை -600 113. ஜீன் 1983
8. சொக்கலிங்கம்,வி.(பதி), ஆசிரிய நிகண்டு, தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சை, 1975,
9. நீதிவாணன்,ஜெ., நடையியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்-600800, முதற்பதிப்பு-1979.
10. ஜெயதேவன், வ., (ப.ஆ.), தொல்காப்பிய அகராதி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, முதற்பதிப்பு - 2004.